சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – 2011–2012–ஆம் ஆண்டிற்கான தலைமைப் பொறியாளர் பதவி உயர்விற்கு, காலிப் பணியிட மதிப்பீடு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண். 4 நாள் 06.01.2012

படிக்கப்பட்டது:–

1) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண் 41125/2011/எப்1, நாள் 15.11.2011.
2) அரசாணை (ப) எண்.3, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 06.01.2012.

*****

ஆணை :-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நகராட்சிப் பொறியியல் பணிகளில், கண்காணிப்புப் பொறியாளர்களாக தற்காலிகமாக பதவி உயர்வு பெற்ற கண்காணிப்புப் பொறியாளர்களின் பணி அப்பதவியில் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டது.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2011–2012–ஆம் ஆண்டிற்கான, தலைமைப் பொறியாளர் பதவி உயர்விற்கு, தகுதியுடைய கண்காணிப்புப் பொறியாளர்களின் தேர்ந்த பட்டியலினை அளித்து அரசின் ஒப்புதல் வேண்டி செயற்குறிப்பு அளித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று, 2011–2012ஆம் ஆண்டிற்கான தலைமைப் பொறியாளர் பணியிடத்திற்கான காலிப் பணியிட மதிப்பீட்டினை 2 (இரண்டு) என நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர்கள்.
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழிமுறையாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை– 600 108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
நகல்:–
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

06/01/2012
பிரிவு அலுவலர்.